பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

# காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID)

## செல்லப் பிராணிகள் காப்புறுதிப் பத்திரம்

இந்த ஆவணமானது, உங்களது காப்புறுதியைப் பற்றிய சுருக்க சாராம்சமொன்றை வழங்குகின்றது. பூரண விபரங்களுக்கு, முழுமையான காப்புறுதிப் பத்திரத்தையும் அட்டவணையையும் உசாவவும், ஏதும் முரண்பாடு காணப்பட்டால், காப்புறுதிப் பத்திரமே மேலோங்கியிருக்கும்.

### 1. காப்புறுதி வகை

செல்லப் பிராணிகள் காப்புறுதிப் பத்திரமானது, இலங்கையில் காப்புறுதி செய்யப்பட்ட வளர்ப்பு நாய்களின் உரிமையினால் ஏற்படும் மிருக வைத்திய செலவினங்கள், விபத்து மரணம், விபத்து காயம் மற்றும் மூன்றாம் தரப்பு பொறுப்பு என்பவற்றுக்கு எதிராக செல்லப் பிராணிகளின் உரிமையாளர்களுக்கு நிதிப் பாதுகாப்பை வழங்கும்.

### 2. பிரதான பயன்பாடுகள் (எதனைக் காப்பீடு செய்கின்றது

2.1 **சுகயீனக் காப்பீடு** – காப்புறுதிப் பத்திர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காத்திருக்கும் காலம், கழிக்கத் தக்கன, பயன்பாட்டு வரையறை மற்றும் விடுகைகளுக்கு உட்பட்டு, காப்புறுதி செய்யப்பட்ட செல்லப் பிராணியின் சுகயீனத்துக்கான நோய்க் கண்டறிதல் மற்றும் சிகிச்சைக்காக ஏற்படும் நியாயமான மிருக வைத்திய செலவினங்களை காப்பீடு செய்யும்.

2.2 **தற்செயலான காயத்துக்கான காப்பீடு** – தற்செயலான அல்லது தெய்வச் செயலால் ஏற்படும், என்பு முறிவு, காயங்கள், பாம்புக்கடி, சூட்டுக் காயம் மற்றும் குறிக்கப்பட்ட காயங்களினால் ஏற்படும் மிருக வைத்திய செலவினங்கள், பிரயோகமான காத்திருக்கும் காலம் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டு, காப்பீடு செய்யும்.

2.3 **தற்செயலான மரணக் காப்பீடு** - விபத்தின் அல்லது தெய்வச் செயலின் நேரடி விளைவாக காப்புறுதி செய்யப்பட்ட செல்லப் பிராணி நாற்பத்தைந்து (45) நாட்களுக்குள் மரணிக்குமேயாயின், நட்டஈடு வழங்கும்.

2.4 **மூன்றாந்தரப்பு பொறுப்பு காப்பீடு** – காப்புறுதிப் பத்திர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச எல்லைகளுக்குள் காப்புறுதி செய்யப்பட்ட செல்லப்

பிராணியினால் மூன்றாம் தரப்பினருக்கு ஏற்படுத்தப்படும் தற்செயலான உடற்காயம் மற்றும் சொத்துச் சேதம் என்பவற்றினால் விளையும் பொறுப்பை, காப்பீடு செய்யும்.

**3 பிரதான விடுகைகள் (காப்பீடு செய்யப்படாதன)**

3.1 முன்னரே இருந்த, பிறப்பு, பரம்பரை அல்லது சரும் நோய்கள்.

3.2 பிரயோகமான காத்திருக்கும் காலத்தின் போது ஏற்படும் நிலைமைகள்.

3.3 வழமையான தடுப்பூசி ஏற்றல், முடி சீவுதல், விருப்பத் தேர்வு, மாற்று உணவுகள், நாளாந்த கவனிப்பு.

3.4 விபத்துக் காயத்தின் காரணமாக தேவைப்படுவதைத் தவிர பல் வைத்தியம்.

3.5 விருப்பத் தேர்வு, அலங்கார, இனப் பெருக்கம் தொடர்பான அல்லது தடுப்பு சிகிச்சைகள்.

3.6 பழக்க நிலைமைகள், மரபு பரிசோதனை, அவயவ மாற்றீடு, செயற்கை உறுப்புக்கள், பரிசோதனை சிகிச்சைகள்.

3.7 முரண்டான செயல்கள், கவனயீனம் அல்லது காப்புறுதி செய்யப்பட்ட செல்லப் பிராணியை நியாயமான வகையில் கவனிக்கத் தவறியமை.

3.8 காப்புறுதிப் பத்திர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச எல்லைகளுக்கு வெளியே நிகழ்ந்தவை.

3.9 போர், பயங்கரவாதம், அணு ஆபத்து அல்லது கதிர்வீச்சுத் தொற்று.

**பிரதான விடுகைகள் மாத்திரமே மேலே விபரிக்கப்பட்டுள்ளன. விடுகைகளின் முழுமையான பட்டியலுக்கு, தயவு செய்து காப்புறுதி ஆவணத்தை உசாசவவும்.**

**4. பொறுப்பு வரையறை**

காப்புறுதிப் பத்திர அட்டவணையில் ஒவ்வொரு காப்பீட்டுப் பிரிவுக்கும் குறிப்பிடப்பட்டுள்ள பயன்பாட்டு வரையறைகளையும், காப்புறுதிக் காலத்தின் போது மொத்த பொறுப்பையும் ஸ்தாபனத்தின் பொறுப்பு விஞ்’சாது. ,.

**5. தவணைக் கட்டணம் செலுத்தும் முறை**

ஒரு வருட காலமாகிய, முழுக் காப்புறுதிக் காலத்துக்கும் **ஒரே செலுத்துகையில்** உங்கள் காப்புறுதிக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

**6. காப்புறுதிப் பத்திரமுடையோர் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தும் கடமைப்பாடுகள்**

6.1 **வெளிப்படுத்துகை கடமை** – வயது, சௌக்கிய நிலை மற்றும் தகைமை தேவைப்பாடுகள் உட்பட, உங்கள் செல்லப் பிராணியைப் பற்றிய உண்மையான, சம்பூரணமான மற்றும் சரியான தகவல்களை நீங்கள் வழங்க வேண்டும்.

6.2 **அடையாளப்படுத்தலும் தகைமையும்** – காப்புறுதி காலம் முழுவதும் அடையாளப்படுத்தல், வயது, இருப்பிட, தகைமை தேவைப்பாடுகளை செல்லப் பிராணி பூர்த்தி செய்ய வேண்டும்.

6.3 **அறிவித்தல்** – கோரிக்கையொன்றுக்கு வழிகோளத் தக்க ஏதும் சுகயீனம், காயம், மரணம் அல்லது மூன்றாம் தரப்பு பொறுப்பு பற்றி குறிக்கப்பட்ட காலவிடைக்குள் இயன்றளவு சீக்கிரமாக நீங்கள் ஸ்தாபனத்துக்கு அறிவிக்க வேண்டும்.

6.4 **ஒத்துழைத்தல்** – கோரிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கு அவசியமான சகல மிருக சுகாதார பதிவுகளையும், பற்றுச்சீட்டுக்களையும், தகவல்களையும் நீங்கள் வழங்க வேண்டியதோடு, விசாரணைகளில் முழுமையாக ஒத்துழைக்களவும் வேண்டும்.

6.5 **பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமை** - ஸ்தாபனத்தின் எழுத்து மூலமான முன் சம்மதமின்றி, மூன்றாம் தரப்பு பொறுப்பை ஏற்றுக்கொள்ளவோ அல்லது சமரசத்துக்கு உடன்படவோ வேண்டாம்.

7. **கோரிக்கையொன்று முன்வைக்கப்படும் போது காப்புறுதி பெருநரின் கடமைப்பாடுகள்.**

**படிமுறை 1** – சம்பவம், சுகயீனம், காயம், மரணம் அல்லது பொறுப்பு பற்றி ஸ்தாபனத்துக்கு கிரமமாக அறிவிக்கவும்.

**படிமுறை 2** – இலங்கையில் பதிவு செய்யப்பட்ட மிருக வைத்தியரிடன்' சிகிச்சை பெற்றுக் கொள்ளவும்.

**படிமுறை 3** – கோரிக்கைப் படிவங்கள், மிருக வைத்திய அத்தாட்சிப் பத்திரங்கள், பற்றுச்சீட்டுகள் மற்றும் ஆதார ஆவணங்கள் அனைத்தையும் சமர்ப்பிக்கவும்.

**படிமுறை 4** – ஸ்தாபனத்தினால் வேண்டப்படும் பரிசோதனை, அல்லது விசாரணையில் ஒத்துழைப்பையும் வழங்கவும்,

8. **முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்**

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

☎ +94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | ✉ – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பயார்பஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

☎ +94 11 2335167 | ✉ info@ircsl.gov.lk | 🌐 www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

☎ +94 11 2505542 / +94 11 2505041 | ✉ info@insuranceombudsman.lk | 🌐 www.insuranceombudsman.lk

**9. மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –**

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**

எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை

☎ +94 11 2428428 | ✉ info@fairfirst.lk | 🌐 www.fairfirst.lk

**கோரிக்கை தொடர்பான விசாரணைகளுக்கு தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்ளவும்**

✉ nonmotorclaimsteam@fairfirst.lk

☎ +94 11 2428618

விரைவான தீர்வுக்காக கிரமமாக செயற்படுவதோடு மற்றும் ஆவணப்படுத்தலை சரியாகப் பேணவும்.

**10. முக்கியமான காப்புறுதி தன்மைகள்**

10.1 **"காத்திருக்கும் காலங்கள்"** – காப்புறுதி அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, சுகயீனம் மற்றும் விபத்து காயங்களுக்கு பிரயோகமாகும்.

10.2 **கழிக்கத் தக்கன –** அட்டவணையின் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, ஒவ்வொரு கோரிக்கைக்கும் அல்லது சம்பவத்துக்கும் ஒவ்வொரு கழிக்கத் தக்க தொகை பிரயோகமாகும்.

10.3 **பிரதேச எல்லைகள் –** காப்பீடானது, இலங்கையில் காப்புறுதி பெறுநரின் வழமையான விதிவிடத்தில் இருந்து ஒரு (01) கிலோமீட்டருக்குள் நிகழும் சம்பவங்களுக்கு மட்டுப்படுத்தப்படுகின்றது.

10.4 **தகைமை நிபந்தனைகள் –** தொடக்கத்தில் முறையாக அடையாளங்காணப்பட்டதும், 8 வாரங்களுக்கும் 7 வருடங்களுக்கும் இடைப்பட்ட வயதுடையதுமான வேலைக்கோ அல்லது இனப்பெருக்கத்துக்கா உபயோகப்படுத்தப் படாததுமான செல்லப் பிராணிகளுக்கே காப்பீடு பிரயோகமாகும்.

**குறிப்பு** – பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த நியதிகளில் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்